செ.வெ.எண். 162 நாள்: 08.12.2016

# பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவதற்கு இடங்கள் அறிவிப்பு

------

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல வாரியாக கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே அந்தந்த வீட்டு உரிமையாளர்கள் தாமாகவே கொட்டுவதற்கு இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த இடங்களை தவிர வேறு இடங்களில் கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டினால் சம்பந்தப்பட்ட கோட்ட இளநிலை/உதவி பொறியாளர்கள் மூலம் அபராதம் விதிக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவதற்காக, திருவெற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட 7வது வார்டு சாத்தாங்காடு குப்பை கொட்டும் வளாகம் (பகுதி), மணலி மண்டலத்திற்குட்பட்ட 20வது வார்டு காமராஜர் சாலை சி.பி.சி.எல் சந்திப்பின் அருகில், மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட 25வது வார்டு ஜி.என்.டி.ரோடு செம்பியம் செங்குன்றம் சாலை அருகில், தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட 37வது வார்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (பகுதி), இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட 53வது வார்டு மூலக்கொத்தளம் சுடுகாடு (பகுதி), திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட 74வது வார்டு ஓட்டேரி குப்பை மாற்று வளாகம், அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட 83வது வார்டு தேவிகருமாரியம்மன் நகர்–சுடுகாடு, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட 101வது வார்டு முதல் பிரதான சாலை கஜலட்சுமி காலனி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட 125வது வார்டு காரணீஸ்வரர் பகோடா தெரு குப்பை மாற்று வளாகம், கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 137வது வார்டு அண்ணா பிரதான சாலை CMWSSB அருகில், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 155வது வார்டு இராமாவரம் பாரதி ரோடு, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட 158வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் குப்பை மாற்று வளாகம், அடையார் மண்டலத்திற்குட்பட்ட 175வது வார்டு கோட்டூர்புரம் இரயில் நிலையம் அருகில் காந்தி நகர் கால்வாய்கரை சாலை, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட 186வது வார்டு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் (பகுதி), சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட 197வது வார்டு காரப்பாக்கம்–கங்கையம்மன் கோவில் தெரு விரிவு ஆகிய இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு:** துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி